# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 119 | திங்கள் Monday | 27.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# இந்திய பாதுகாப்பு உபகரணம் மற்றும் தொழில்நுட்பத்தின் மீது உலக நாடுகள் கொண்டுள்ள நம்பிக்கை அதிகரித்து வருகிறது



## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

புதுடெல்லி: பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாபுதிய உயரத்தை எட்டியுள்ளதாக மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி பதவியேற்ற பிறகு, மனதின் குரல் (மன் கீ பாத்) என்ற தலைப்பில் மாதம்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் நாட்டு மக்களிடம் வானொலியில் உரையாற்றி வருகிறார். அதன்படி, 136-வது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி இன்று நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

மக்களே, இந்த மாதம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் விஞ்ஞானிகள்,தொலைதூரம் செல்லக்கூடிய பினாகா ராக்கெட் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டனர். இந்த வெற்றி நமது விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. அதேபோல குஷா என்ற பெயரில் அதிநவீன ஏவுகணை கவசத்தையும் டிஆர்டிஓ உருவாக்கியது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மகேந்திரகிரி போர்க்கப்பல் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. தற்சார்பு இந்தியாவை நோக்கிய பயணத்துக்கு வலு சேர்க்கும் வகையில் இது அமைந்துள்ளது.

இன்று பாதுகாப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி, நட்பு நாடுகள் உடனான அரசியல் ரீதியான உறவு உள்ளிட்டவை புதிய உயரத்தை தேசம் எட்டியுள்ளன.

இந்த மாத தொடக்கத்தில் நான் இந்தோனேசியா பயணம் மேற்கொண்டிருந்தேன். அப்போது பிரம்மோஸ் ஏவுகணை சார்ந்த முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்திய பாதுகாப்பு உபகரணம் மற்றும் தொழில்நுட்பத்தின் மீது உலக நாடுகள் கொண்டுள்ள நம்பிக்கை அதிகரித்து வருவதை இது காட்டுகிறது. இவ்வாறு பிரதமர்மோடி தெரிவித்தார்.

# மதுரை, கோவை மெட்ரோ ரெயில் திட்டம் மீண்டும் நிராகரிப்பு



சென்னையை தொடர்ந்து, மதுரை, கோவை உள்ளிட்ட நான்கு நகரங்களில் மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. கோவையில் 39 கி.மீ. தொலைவுக்கு அவிநாசி சாலையில் கருமத்தம்பட்டி வரையிலும், உக்கடத்தில் இருந்து சத்தியமங்கலம் சாலையில் வலியம்பாளையம்பிரிவு வரையிலும் உயர்மட்டப்பாதையில் மெட்ரோ ரெயில் திட்டம் அமைக்க திட்டமிடப்பட்டது.

மதுரையில் திருமங்கலம் - ஒத்தக்கடை வரை 31.93 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்த உள்ளது. 27 கி.மீ. உயர்மட்டப்பாதையில் 23 மெட்ரோ ரெயில் நிலையங்களும், 4.65 கி.மீ. சுரங்கப்பாதையில் 3 மெட்ரோ ரெயில் நிலையங்களும் அமைக்கதிட்டமிடப்பட்டது. கோவை, மதுரையில் மெட்ரோ ரெயில் திட்டம் செயல்படுத்துவதற்கான விரிவானதிட்ட அறிக்கையை மத்திய, மாநில அரசிடம் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ஏற்கெனவே வழங்கியது.

இதையடுத்து, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியது. அதன்படி, மதுரையில் ரூ.11,360 கோடியிலும், கோவையில் ரூ.10,740 கோடியிலும் மெட்ரோ ரெயில் திட்டங்கள் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு வாயிலாக, மத்திய அரசிடம் வழங்கப்பட்டது. இதனையடுத்து கோவை, மதுரை நகரங்களுக்கான மெட்ரோ ரெயில் திட்டத்துக்கான திட்ட அறிக்கையை மத்தியஅரசுதிருப்பிஅனுப்பியது. மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு அனுமதி அளிக்க குறைந்தது 20 லட்சம் மக்கள்தொகை தேவைஎன்றும்,கோவை மற்றும் மதுரையில் 15 லட்சம் மக்கள்தொகை மட்டுமே இருப்பதால் அனுமதி அளிக்க முடியாது எனக் கூறி, திட்ட அறிக்கைகளை மத்திய அரசு திருப்பி அனுப்பியது.

இதனை தொடர்ந்து மெட்ரோதிட்டம்தொடர்பாக தமிழ்நாடு அரசு கடந்த மே மாதம் மீண்டும் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்திருந்தது. இந்த நிலையில், மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரெயில் திட்ட அறிக்கையை மத்திய அரசு மீண்டும் நிராகரித்து திருப்பி அனுப்பியுள்ளது.

மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்தும் அளவுக்கு மக்கள் தொகைஇல்லைஎனவும் மதுரை, கோவையில் மெட்ரோ ரெயில் திட்டம் அமைவதால் பயண நேரம் குறைய வாய்ப்பில்லை எனவும் மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு பதில் பேருந்து போக்குவரத்து நடைமுறையை மேம்படுத்தலாம் என மத்திய வீட்டு வசதித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்தநவம்பரில்நிராகரிக்கப்பட்டு மே மாதத்தில் மீண்டும் அனுப்பப்பட்டநிலையில்,தற்போது 2-வது முறையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

# மத்திய கல்வி அமைச்சராக பிரஹலாத் ஜோஷி பொறுப்பேற்பு



புதுடெல்லி: நாட்டின் புதிய கல்வி அமைச்சராக பிரஹலாத் ஜோஷி (ஜூலை 26) பொறுப்பேற்றுக்கொண்டார்.

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரின் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து, மத்திய கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான், நேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக்கொண்டதை அடுத்து, புதிய கல்வி அமைச்சராக மத்திய அமைச்சர் பிரஹலாத் ஜோஷிக்கு கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டது.


இதையடுத்து, இன்று பிரஹலாத்ஜோஷிதனது பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து, கல்வி அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடன் அவர் தனது முதல் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்.

பின்னர்செய்தியாளர்களிடம் பேசிய பிரஹலாத் ஜோஷி, "பிரதமர் என் மீது முழு நம்பிக்கை வைத்துஇந்தபொறுப்பை என்னிடம் ஒப்படைத்துள்ளார். நேற்று நான் கர்நாடகாவில் இருந்தேன். நேற்று இரவே டெல்லி வந்து சேர்ந்தேன். இன்று காலை நான் பொறுப்பேற்றுக்கொண்டேன்.

இது எனக்கு புதிய துறை. இந்த துறையில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் தொடர்பாக ஆய்வு செய்து வருகிறேன். தகவல்களைச் சேகரித்து ஒட்டுமொத்த அமைச்சகத்தின்செயல்பாட்ட புரிந்து கொள்ள முயன்று வருகிறேன். இன்று நாங்கள் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்தினோம். காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தொடர் ஆலோசனைகளைக் கூட்டங்களை நடத்தினேன். இது மிகப்பெரிய துறை என்பதால், இதை முழுமையாக புரிந்துகொண்ட பிறகு உங்களிடம் விரிவாகப் பேசுவேன்." என தெரிவித்தார்.

கர்நாடகாவின் தார்வார் மக்களவைத் தொகுதியில் இருந்து ஆறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவரான 63 வயதாகும் பிரஹலாத் ஜோஷி, ஏற்கனவே நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய துறைகளின் அமைச்சராக இருந்து வருகிறார்.

# "இனி தேர்தலில் போட்டியிட மாட்டேன்" சித்தராமையா அறிவிப்பு



பெங்களூரு: "தேர்தலில் போட்டியிட்டால் மக்களுக்குப் பணம் கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ள சூழல் உருவாகியுள்ளது.அரசியல் களம் சீர்கெட்டுவிட்டதால்,

2028-ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடப்போவதில்லை" என கர்நாடக முன்னாள் முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

மாண்டியா மாவட்டம் கே.ஆர்.பேட் பகுதியில் சனிக்கிழமையன்று நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய சித்தராமையா, 'இன்றைய அரசியல் களம் சீர்கெட்டுவிட்டதால், 2028-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் நான் போட்டியிடப்போவதில்லை. இருப்பினும், அரசியலில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு,மக்களின் துயரங்கள் மற்றும் மகிழ்ச்சிக்கான குரலாகத் தொடர்ந்து ஒலிப்பேன்.

வருணா தொகுதி மக்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிடுமாறு என்னைக் கேட்டு வருகின்றனர். ஆனால், இனிவரும் காலங்களில் எந்தத் தேர்தலிலும் போட்டியிடக்கூடாது என்று நான் முடிவு செய்துள்ளேன். கடந்த காலங்களில் நான் தேர்தலில் போட்டியிட்டபோது, தொகுதி மக்களே எங்களுக்குத் தேவையான நிதியை வழங்கி எங்கள் வெற்றியை உறுதி செய்தனர். ஆனால் இன்று அத்தகைய சூழல் இல்லை.

எனக்கு இப்போது 79 வயதாகிறது. எங்கள் அரசாங்கத்தின் பதவிக்காலம் இன்னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளன. அதற்குள் எனக்கு 81 அல்லது 82 வயதாகிவிடும். எனது உடல்நிலை முன்பு இருந்ததைப் போல வலுவாக இல்லை. முன்பிருந்த அதே உற்சாகத்துடன் தொடர்ந்து பணியாற்றுவது இனி சாத்தியமில்லை.

2028-ம் ஆண்டு வாக்கில் எனக்கு 82 வயதாகியிருக்கும். அது எனது அரசியல் வாழ்க்கையின் 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் ஆண்டாக அமையும். 1978-ல் தாலுகா வாரிய உறுப்பினராக எனது அரசியல் பயணத்தைத் தொடங்கினேன். தோல்விகளையும் வெற்றிகளையும் நான் கண்டுள்ளேன். ஆனால், நான் நம்பிய கொள்கைகளுக்கு எதிராகச் செயல்படாமலும், எனது மனசாட்சிக்குத் துரோகம் இழைக்காமலும் இருந்ததில் நான் மனநிறைவு கொள்கிறேன்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்



Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



சென்னை எம்ஜிஆர் மாளிகையில் அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகிகள் உடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிச்சாமிஅவர்கள்ஆலோசனைக்கூட்டத்தில்கலந்துகொண்டுஅதிமுகபொதுச்செயலாளர்எடப்பாடிபழனிச்சாமி அவர்களுக்கு பூங்கொத்தை வழங்கி சிறப்பித்தார்

# தூத்துக்குடியில் "எக்ஸ்போ 2026" பொருட்காட்சியை மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி ஓ.எல்.எஸ். நண்பர்கள் பொருட்காட்சி குழு சார்பில் நடைபெற்ற "எக்ஸ்போ2026"பொருட்காட்சியை தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி குத்துவிளக்கேற்றிதொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் புனித சபையறையான அதிபர் தந்தை சிங்கராயன், மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் புளோரன்ஸ், ஓ.எல்.எஸ். நண்பர்கள் பொருட்காட்சி குழுவின் தலைவர் டென்சிங், செயலாளர் அருள், பொருளாளர் நிர்மலா, சட்ட ஆலோசகரும் தூத்துக்குடி பார் அசோசியேஷன் செயலாளருமான செல்வின் கழக நிர்வாகிகள் முருகேசன், மரியதாஸ், வெலிங்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், ஓ.எல்.எஸ். நண்பர்கள் பொருட்காட்சி குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

# கோவையில், ஜி.ஆர்.ஜி. ஜென் நெஸ்ட் இன் லஞ்ச்பேடு பிட்ச் போட்டிகள் நிறைவுபெற்றது

## ஏழு ஏ.ஐ. மற்றும் அக்ரி டெக் தொடக்க நிறுவனங்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது

கோவையைச் சேர்ந்த ஜி.ஆர்.ஜி ஜென் நெஸ்ட் இன்குபேட்டர் நிறுவனம்,செயற்கை நுண்ணறிவு, மற்றும் அக்ரி டெக் துறைகளில் வருவாயை ஈட்டும் தொடக்க நிறுவனங்களுக்கான, தனது முதல் பிட்ச் போட்டிகளை லஞ்ச் பேட் எனும் தலைப்பில் நடத்தியது. இதில் கலந்துகொண்டு குழுத்திறன், தனித்திறன் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றம் பரிசுகள் வழங்கப்பட்டது. கோவை கொடிசியா அருகே உள்ள ஜிஆர்டி ஜென் நெஸ்ட் மையத்தில், நடைபெற்ற இந்த போட்டிகளில், கலந்து கொள்ள நாடு முழுவதிலும் இருந்து, பல்வேறு நிறுவனர்கள், ஏஞ்சல் முதலீட்டாளர்கள், வெஞ்சர் கேபலிஸ்ட்கள், மற்றும் உயர் நிகர தனிநபர்கள் ஒன்று கூடி நேரடி, பிட்ச்களையும், முதலீட்டாளர் ஆலோசனை களையும் எதிர்கொண்டனர். இந்த போட்டிக்கு இந்தியா முழுவதும் இருந்து 70 தொடக்க நிறுவனங்கள் விண்ணப்பித்து இருந்தது,இதில் 16 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு, முதலீட்டாளர் குழு நேரடியாக பிட்ச் செய்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனரும், 7 நிமிட தங்களது சம்மிட்டை, வழங்கியதுடன், மூன்று நிமிட கேள்வி பதில் நிகழ்ச்சியிலும் பங்கேற்றனர். ஒருங்கிணைந்த பண பரிசு, தொகைக்காகவும் தொடர் முதலீடு மற்றும், ஜிஆர்டி ஜென் நெஸ்டின் மெய்நிகர் இன்குபேஷன் திட்டத்திற்கான விஐபி பரிசீலனைக்காகவும் இதில் பெற்றனர். பெறப்பட்ட 70 விண்ணப்ப ங்களிலிருந்து, வருவாய் வளர்ச்சி,சந்தை வாய்ப்பு, குழுவலிமை மற்றும் அளவீட்டுத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு, ஏஐ மற்றும் அக்ரி டெக் ஆகிய இரு பிரிவுகளிலும் இருந்து, 16 நிறுவனங்கள் நேரடியாக அழைக்க பட்டது



இதில், சிறந்த ஸ்டார்ட் அப் களை வழங்க, நாடு முழுவதிலும் இருந்து கோவைக்கு வருகை புரிந்து தங்களது சமர்ப்பிப்புகளைதெளிவுபடுத்தினார். இந்த நிகழ்ச்சியில் தலைமை நிர்வாகஅதிகாரி அருண் நாயர்,மேனேஜிங்பார்ட்னர் விமல் குமார், நேட்டிவ் ஏஞ்சல் நெட்வொர்க் நிறுவனத்தின் இயக்குனர் ஸ்ரீராம் சங்கரன், மற்றும் ஜி.ஆர்.ஜி ஜென் நெஸ்ட் தலைமை நிர்வாகி அதிகாரி ஹேதல் சோன்பால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொதிகைமலை மற்றும் தென்காசி அருவிகளை மையமாகக் கொண்ட சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை சுற்றுலாப் பாதையை மேம்படுத்த வேண்டும்

## தென்காசி எம்.பி. Dr.ராணி ஸ்ரீகுமார் வலியுறுத்தல்

தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள தென்காசிநாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பொதிகை மலை மற்றும் இயற்கை எழில் மிகுந்த தென்காசி அருவிகளின் அபாரமான சுற்றுலாத் திறன் குறித்து மத்திய அரசின் கவனத்தை* ஈர்க்க விரும்புகிறேன்.



மேலும் மத்திய பட்ஜெட்டில் நாடு முழுவதும் கருப்பொருள் அடிப்படையிலான சுற்றுலாப் பாதைகளை, குறிப்பாக சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை சுற்றுலாப் பாதைகள் (Eco & Nature Tourism Trails) உருவாக்குவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, *பொதிகை மலை-தென்காசி பகுதியை நாட்டின் முன்னோடியான இயற்கை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த,* சுற்றுச்சூழலுக்கு உகந்த அடிப்படை வசதிகள், மேம்பட்ட சாலை இணைப்புகள்,பயணிகளுக்கான வசதிகள், இயற்கை விளக்க மையங்கள் (Interpretation Centres), மலையேற்ற மற்றும் நடைபயண (Trekking) வசதிகள், டிஜிட்டல் சுற்றுலா தகவல் மையங்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உள்ளூர் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளுக்கு மத்திய அரசு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்க பரிசீலிக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் நிலையான சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மேற்குத் தொடர்ச்சி மலையின் நுண்ணிய சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்கவும் , அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பெரிதும் உதவும்.

எனவே , *மத்திய பட்ஜெட் அறிவிப்பின் அடிப்படையில் "பொதிகை மலை-தென்காசி சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை சுற்றுலாப்பாதை"திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து விரைவில் செயல்படுத்துமாறு நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது மத்திய அரசை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணிஸ்ரீ குமார் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியத்தில் அருள்பாளித்து வரும் பழமை வாய்ந்த அருள்மிகு முத்தாம்பிகை சமேத அர்த்தநாரிஸ்வரர் திருக்கோவிலில் பிரம்மோற்சவ விழாவின் சிகர நிகழ்வாக திருத்தேர்த் திருவிழா மிக விமர்சையாக நடைபெற்றது இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேறினை வலம்பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்து சென்றனர்

# தூத்துக்குடி 41வது வார்டில் சாக்கடை கலந்த குடிநீர்; பொதுமக்கள் அவதி! மேயர், ஆணையாளர் அலட்சியம் – வழக்கறிஞர் சி. மந்திரமூர்த்தி கண்டனம்

தூத்துக்குடி மாநகராட்சியின் 41வது வார்டு பகுதியில் குடிநீருடன் சாக்கடை நீர் கலந்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இதனால் அப்பகுதியில் கடுமையான சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன், குழந்தைகள், முதியோர் உள்ளிட்டோர் பல்வேறு நோய் பாதிப்பு அச்சத்தில் உள்ளதாகவும் கூறப்படு கிறது. இந்தப் பிரச்சினையை பலமுறை மாநகராட்சி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை உரியநடவடிக்கைஎடுக்கப்படவில்லை என பொதுமக்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து வழக்கறிஞர் சி.மந்திரமூர்த்தி, தெரிவிக்கையில் மக்களின் அடிப்படை தேவையானபாதுகாப்பான குடிநீரை வழங்குவதில் தூத்துக்குடி மாநகராட்சி மேயரும், ஆணையாளரும் முழுமையாக தோல்வியடைந்துள்ளனர்.இதனால்பொதுமக்களின் தேவையான குடிநீரை முறையாக வழங்கவில்லை இதனால் தற்போது தூத்துக்குடி மாநகராட்சி 41வது வார்டு பகுதியில் உள்ள மக்களுக்கு சாக்கடை கலந்த குடிநீர் வருவதால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர் இதை மாநகராட்சி நிர்வாகம்கண்டுகொள்ளாமல் இருப்பதால் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். ஆகவே மாநகராட்சி நிர்வாகம் இந்த சாக்கடை கலந்த குடிநீரை உடனடியாக நிறுத்தி, நிரந்தர தீர்வு காண வேண்டும். இல்லையெனில் பொதுமக்களுடன் இணைந்து போராட்டம் நடத்தப்படும்" என்று கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளார்.



# கோவையில் புதிய நிசான் "டெக்டன்" காரை அமைச்சர் சம்பத் குமார் அறிமுகம் செய்தார்

கோவை கணபதியில் உள்ள இ.வி.எம். நிசான் விற்பனை மையத்தில், நிசான் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வமாக அறிமுகம் செய்து வைத்து, முதல் வாடிக்கையாளர்களுக்கு புதிய "டெக்டன்" கார் அறிமுக விழா நடைபெற்றது.




தமிழ்நாடு இ.வி.எம். நிசான் விற்பனை பொது மேலாளர் சபரி நாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத் குமார், புதிய நிசான் டெக்டன் காரை வாழ்த்து தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வாகனத்தின் தொழில்நுட்ப அம்சங்கள், பாதுகாப்பு வசதிகள், நவீன வடிவமைப்பு, சக்திவாய்ந்த செயல்திறன், எரிபொருள் சிக்கனம், பயணிகளின் வசதிக்கான மேம்பட்ட உள்புற அமைப்பு, டிஜிட்டல் இணைப்புவசதிகள் மற்றும் சமகால தொழில்நுட்பங்கள் குறித்து விற்பனை மேலாளர்கள் பிரசாந்த்மற்றும்கணேஷ் விரிவாக விளக்கமளித்தனர்.

மேலும், நகர்ப்புற மற்றும் நீண்ட தூர பயணங்களுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த புதிய மாடல், பாதுகாப்பு மற்றும் செயல்திறனில் புதிய தரத்தை உருவாக்கும் எனவும், வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைபூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நவீன அம்சங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட வாடிக்கையாளர்கள் புதிய வாகனத்தை நேரில் பார்வையிட்டு அதன் சிறப்பம்சங்களை அறிந்து கொண்டதுடன், சோதனை ஓட்டத்திலும் ஆர்வமுடன் பங்கேற்றனர். நிசான் நிறுவ னத்தின் புதிய "டெக்டன்" கார் அறிமுகம் கோவை வாகன சந்தையில் புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக நிகழ்ச்சியில் பங்கேற்றோர் கருத்து தெரிவித்தனர்.

# பல்கலைக்கழக அளவில் முதலிடம் குமரி மாவட்ட மாணவிக்கு தங்கப்பதக்கம்

கன்னியாகுமரி மாவட்டம், பெருவிளையைசேர்ந்த மாணவி சஹ்லா பெருமை தேடித் தந்துள்ளார்.

வெள்ளிச்சந்தைதனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், ஊட்டச்சத்து மற்றும் உணவியல் துறையில் பல்கலைக்கழகஅளவில் தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் பெருவிளை சுல்பி - நிஜாரா தம்பதியினரின் மகள். இவரது சாதனையை பாராட்டி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



## கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள, குமரகுரு பன்முகக்கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது




கோவை சரவணம்பட்டி பகுதியில் குமரகுரு பன்முகக்கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதலாமாண்டு மாணவர்களுக்கான தொடக்க விழா ஸ்வாகதம் 2026 எனும் தலைப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் மத்தியில் குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் ஸ்ரீ சங்கர் வாணவராயர் கூறியதாவது..

சமூக வலைத்தளங்களில் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே நேரத்தை வீணாக்குவதை மாணவர்கள் கைவிட வேண்டும்; தங்கள் எதிர்காலத்தை தாங்களே செதுக்கத் தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பள்ளிக்கும் கல்லூரிக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தை சுட்டிக்காட்டிய அவர், "இனி மாணவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டுதலை மட்டுமே பின்பற்றுபவர்கள் அல்ல, அவர்கள் தங்களின் சொந்த பயணத்தின் எஜமானர்கள்" என்று கூறினார்.

மாணவர்கள் தங்களுக்குப் விருப்பமான பல்வேறு துறைகளை இணைந்து படிக்க வேண்டும் என்று ஊக்குவித்த அவர், பொருளியல் மாணவர்கள் அறிவியல் துறையையும், மொழிப்பாட மாணவர்கள் பொதுக் கொள்கைகளையும் கற்கத் தயங்கக் கூடாது என்றார். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெற்றோர்களிடம், தங்கள் பிள்ளைகளை கண்காணிப்பவர்களாக மட்டுமல்லாமல், அவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாகவும் உறுதுணையாகவும் இருக்கவேண்டும்என்று கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, கல்லூரியின் முதல்வர் டாக்டர் சி. தீபேஷ்வர் வரவேற்புரையாற்றினார். 2018-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரி, குறுகிய காலத்தில் அடைந்த தேசிய அளவிலான வளர்ச்சிகளை அவர் பட்டியலிட்டார்.

புதிய மாணவர்களின் பன்முகத்தன்மை குறித்து பேசிய அவர், "இந்தபேட்ச்சில்60சதவீதம் பேர் மாணவிகள். இந்தியாவின் 9 மாநிலங்கள் மற்றும் 5 வெளிநாடுகளில் இருந்து மாணவர்கள் இணைந்துள்ளனர். இவர்கள் 16 வெவ்வேறு தாய்மொழிகளைப் பேசுபவர்கள். திறமையான மாணவர்களின் கல்விக்கு பொருளாதார சூழ்நிலை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக, இந்த ஆண்டு சுமார் 70 மாணவர்களுக்கு என்எம் ஸ்டெப் மற்றும் விளையாட்டுத் துறைக்கான கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன," என்று தெரிவித்தார்.

நிறைவாக, கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் கே.எஸ். நாராயணன் நன்றியுரை கூறி விழாவை நிறைவு செய்தார்.

## தென்காசி நகராட்சி பேருந்து நிலையத்தில் கலெக்டர் ரஞ்ஜித் சிங் அதிரடி ஆய்வு



தென்காசி மாவட்டத்தில் வெறி நாய் தடுப்பூசி முகாம் - மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத்சிங், தலைமையில் நலைபெற்றதுபின்னர் நகராட்சி பேருந்து நிலையத்தில் அதிரடி ஆய்வு நடத்தி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார் இது பற்றிய விபரம் ஆவது தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தென்காசி மாவட்டத்தில் உள்ள சமூக நாய்களுக்கான வெறிநோய் தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் தெரிவிக்கையில், தென்காசி புதிய பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் வளாகம் மற்றும் அருகிலுள்ள குடியிருப்பு பகுதிகளிலிருந்து தெருவில் சுற்றித்திரியும் சமூக நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி முகாம் இன்றைய தினம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டது.இம்முகாமில்39சமூகநாய்களுக்கு வெறிநோய் தடுபூசி பணி மேற்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே, தென்காசி நகராட்சியில் 871 சமூக நாய்களுக்கு தடுப்பூசி பணிமேற்கொள்ளப்பட்டது. பொது மக்களுக்கு நாய்க்கடி வெறிநோய் பரவா வண்ணம் இருக்கும்பொருட்டுஅனைத்து சமூக நாய்களுக்கும் இத்தடுப்பூசி பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,தெரிவித்தார்.

மேலும், பொதுமக்களுக்கு நாய்க்கடி வெறிநோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.அதனைத் தொடர்ந்து தென்காசி நகராட்சி பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திடீரென ஆய்வு செய்தார் நகராட்சி பேருந்து நிலைய உள்பகுதியில் அமைந்துள்ள அறிவுசார் மையத்தில் உள்ள மாணவ மாணவிகளை நேரில் சந்தித்து போட்டி தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு வாழ்த்து கூறினார் பின்னர் மாணவர்கள் சாப்பிட்டபின் கைகழுவதற்கு சரியான வசதி இல்லை என கூறியதை தொடர்ந்து உடனடியாக அதை சரிசெய்து கொடுக்கநகராட்சி அதிகாரிகளை கேட்டுக்கொண்டார் நடைமேடை இரண்டில் திருநெல்வேலி பேருந்து செல்லும் வழித்தடத்தில் புதிதாக விளக்குகள் அமைக்க கேட்டுக்கொண்டார் பின்னர் நகராட்சி பேருந்து நிலைய வளாக கடைகளில் காலாவதியானபொருட்கள் ஏதும் உள்ளதா எனவும் உணவு பொருட்கள் தரமாக இருக்க வேண்டுமென வியாபாரிகளிடம் கேட்டுக் கொண்டார் பொதுமக்களுக்குநடந்து செல்லும் வகையில் இடையூறு ஏற்படுத்தும் சிமெண்ட் ஸ்லாப்புகளை புதிதாக அமைத்துக் கொடுக்கவும் கேட்டுக்கொண்டார்

இந் நிகழிச்சியில், நகராட்சி சுகாதார அலுவலர்திரு.பிச்சையாபாஸ்கர், பொறியாளர் கண்ணன் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு. கோயில் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாநகர் நகை வியாபாரிகள் சங்கத்தின் வெள்ளி விழா மற்றும் 15வது ஆண்டு மகாசபை கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மீனாட்சி சுந்தரனார் சாலையில் அமைந்துள்ள தனியார் உணவகத்தில், ஈரோடு மாநகர் நகை வியாபாரிகள் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டு மற்றும் 15-வது ஆண்டு மகாசபை கூட்டம் (2025-2026) நடைபெற்றது. சங்கத் தலைவர் சி.பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், செயலாளர் பிரகாஷ், துணைச் செயலாளர் பி.பி.ராஜா, பொருளாளர் விசு ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியின் தொடக்கமாக அருட்குரலுடன் கூட்டம் துவக்கப்பட்டு, தலைவர் உரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. பின்னர், சமீபத்தில் மறைந்த சங்க உறுப்பினர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மௌனஅஞ்சலிசெலுத்தப்பட்டு வரவேற்புரை ஆற்றப்பட்டது.

தொடர்ந்து, செயலாளரின் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின், 2024-2025 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவு கணக்குகளைச் சமர்ப்பித்து பொதுக்குழுவின் அங்கீகாரத்தை பெறப்பட்டது இக்கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள்சேர்க்கை பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், 2024-2025 மற்றும் 2026-2028-ஆம் ஆண்டுகளுக்கான செயற்குழு கூட்டத் தீர்மானங்களுக்கும் முறைப்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது. சங்கத்தின் எதிர்கால வளர்ச்சி திட்டங்கள், உறுப்பினர்களின் நலன் மற்றும் அவர்களின் கோரிக்கைகள் குறித்து கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து தலைவர், செயலாளரின் உரையாடல்கள், உறுப்பினர்களின் கருத்துரைகள் கேட்கப்பட்டு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவரின் சிறப்புரை மற்றும் நன்றியுரையுடன் மகாசபைகூட்டம்நிறைவுற்றது. இக்கூட்டத்தில் ஈரோடு மாநகர் நகை வியாபாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் என 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## தென்காசி மாவட்டத்தில்

## 34 திருநங்கைகளுக்கு வீட்டுமனைபட்டா வழங்கியமாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத்

தென்காசி மாவட்டத்தில் 34 திரு நங்கைகளுக்குவீட்டுமனைபட்டா வழங்கிய மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத் சிங், 2008ல்இந்தியாவிலேயே முதன் முதலாக திருநங்கைகள் நல வாரிய அமைத்தவர் டாக்டர் கலைஞர் தென்காசி ஜூலை 25 2008 ஆம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக திருநங்கைகள் நல வாரியம் அமைத்தவர் அவரது பெரு முயற்சியின் காரணமாகதற்போது திருநங்கைகள் பல்வேறு தொழில்களுக்குதிரும்பி உள்ளனர் சமூகத்தில் மதிப்பிற்குரியவர்களாக மாறிய இந்த வேளையில் தமிழக அரசு 34 திருநங்கைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கியது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. மேலும் இது பற்றிய விபரமாவது தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலககூட்டரங்கில் இன்றுசமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் திருநங்கைகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாம் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்,ந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு அரசு தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியம் 2008-இல் அமைத்து திருநங்கைகளின் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்நலவாரியத்தின் மூலம் திருநங்கை/ திருநம்பி/ இடைபாலினருக்கு அடையாள அட்டை, குடும்ப அட்டை, சுயதொழில் துவங்க மானியத்தொகை, கல்வி உதவித்தொகை, ஓய்வுதியம், சுயஉதவிக்குழு பயிற்சி மற்றும் மானியத்தொகை, காப்பீட்டுத்திட்ட அட்டை, இலவச தையல் இயந்திரங்கள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இன்றைய தினம் திருநங்கை/திருநம்பிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள 2026-2027-ஆம் நிதியாண்டில் நடைபெறும் இச்சிறப்பு முகாமில் திருநங்கை/திருநம்பி/ இடைபாலினருக்கான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கும் தொடர்புத்துறைகள் கலந்து கொண்டு திருநங்கைகளுக்கான துறைசார்ந்த திட்டங்கள் குறித்தும், பல்வேறு நலத்திட்ட உதவிகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

திருநங்கைகளுக்கான ஆதார் அட்டை திருத்தம், ரேசன் அட்டை திருத்தம் மற்றும்முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத்திட்ட அட்டை விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இம்முகாமில், 34 திருநங்கைகளுக்குஆலங்குளம் வட்டாரத்தில் உள்ள குத்தப்பாஞ்சான் கிராமத்தில் உள்ள இடத்திற்கு இலவச வீட்டுமனை பட்டாவினைமாவட்டஆட்சியர் அவர்கள் வழங்கினார். இம்முகாமில் 100க்கும் மேற்பட்டதிருநங்கைகள் கலந்து கொண்டனர்.

இம்முகாமில்,மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எம்.வீராசாமி,கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர் (பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு) திரு.மதியழகன், இயக்குநர் - கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் திரு. தியாகராஜன், மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி.மதிவதனா, பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் திருமதி.மாரியம்மாள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. பால்துரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் விஜய்யின் 52வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

## மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு தொகுதி திருப்பாலை பகுதி கழகத்தின் சார்பாக மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா





மதுரைவடக்குமாவட்டம் கிழக்கு தொகுதி திருப்பாலை பகுதி கழகத்தின் சார்பாக மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தினேஷ்குமரன் இணைச் செயலாளர், கிஷோர் பகுதி பொருப்பாளர் விழாவினை ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில்

கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது . துப்புரவு பணியாளர்கள் 100 நபர்களுக்கு இலவச வேட்டி சேலை மற்றும் மதிய உணவு வழங்கி விழா இனிதே நிறைவு பெற்றது இதில் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்

## சிவகாசி அருகே பட்டாசு வெடி விபத்தில் 3 பேர் உயிரிழப்பு, ஒருவர் காயம்



சிவகாசி: சிவகாசி அருகே செங்கமலப்பட்டியில் நிகழ்ந்த பட்டாசு வெடிவிபத்தில் இரு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்க ப்பட்டுள்ளார்.

சிவகாசி அருகேசெங்கமலப்பட்டியைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் ரவீந்திரன் என்பவரது மகன்களான ராம்பிரசாத்(35), ராமசந்திரன்(37) ஆகியோருக்குச் சொந்தமான விவசாய நிலத்தில், தகர செட் அமைத்து சட்ட விரோதமாக பட்டாசு உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளது. (ஞாயிற்றுக் கிழமை) 4 பேர் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நிலையில், காலை 8.15 மணி அளவில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. தகவலறிந்து வந்த சிவகாசி தீயணைப்பு துறையினரும், போலீசாரும் மீட்பு பணியில் ஈடுபட்டனர். படுகாயமடைந்த ராமசந்திரன் என்பவரை மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த அவர்கள், வெடி விபத்தில் உயிரிழந்த ராம்பிரசாத் என்பவரின் உடல் உட்பட இருவரின் உடல் பாகங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்து குறித்து சிவகாசி கிழக்கு போலீஸார் வழக்குப்பதிவுசெய்துவிசாரித்து வருகின்றனர்.

வெடி விபத்தின்போது ஏற்பட்ட அதிர்வு 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு உணரப்பட்டது. தகர செட் அருகே நிறுத்தி இருந்த கார் மற்றும் பைக் சேதமடைந்தன.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் தென்காசி மாவட்டத்தில் உள்ள சமூக நாய்களுக்கான வெறிநோய் தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் தென்காசி நகராட்சி பொறியாளர் கண்ணன் சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர் ஆய்வாளர்கள் மாரிமுத்து கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# தென்னந்தியாளத்தில் கபடி போட்டி கோலாகலம்; அரியலூர் அணி சாம்பியன் பட்டம் வென்றது



இராணிப்பேட்டை மாவட்டம், தென்னந்தியாளம் கிராமத்தில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் மாபெரும் கபடி போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 23 அணிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தின.போட்டிகள் பலகட்டங்களாக நடைபெற்ற நிலையில், சிறப்பாக விளையாடிய அணிகள் அடுத்தடுத்த சுற்றுகளுக்கு முன்னேறின. கடுமையான போட்டிக்குப் பிறகு, இறுதிச்சுற்றுக்கு 5 அணிகள் தேர்வு செய்யப்பட்டன. இறுதிப் போட்டியில் வீரர்கள் தங்களது திறமை,வேகம் மற்றும் அணிச் செயல்பாட்டை வெளிப்படுத்தி பார்வையாளர்களை கவர்ந்தனர்.இதில் சிறப்பாக விளையாடிய அரியலூர் அணி முதலிடம் பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு பொதுமக்கள் மற்றும் விளையா ட்டு ஆர்வலர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நந்தியாளம் ஊராட்சி மன்றத் தலைவர் தேவி பூபாலன், முதலிடம் பெற்ற அணிக்கு முதல் பரிசை வழங்கி பாராட்டினார். மேலும் போட்டியில் சிறப்பாக விளையாடிய அணிகளுக்கும் வீரர்களுக்கும் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

விழாவில் பேசிய ஊராட்சி மன்றத் தலைவர் தேவி பூபாலன், கிராமப்புற இளைஞர்களிடம் விளையாட்டுத் திறன்கள் அதிகமாக உள்ளன என்றும், கபடி போன்ற பாரம்பரிய விளையா ட்டுகள் உடல் ஆரோக்கியத்தையும் ஒழுக்கத்தையும் வளர்க்க உதவுகின்றன என்றும் தெரிவித்தார். மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கல்வியுடன் விளையாட்டிலும் கவனம் செலுத்தி மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று சாதனை படைக்க வேண்டும் என்று ஊக்கமளிக்கும் வகையில் அறிவுரை வழங்கினார்.


இந்த கபடி போட்டியை காண ஏராளமான பொதுமக்கள் திரண்டிருந்தனர். போட்டி முழுவதும் உற்சாகமான சூழலில் நடைபெற்றதுடன், விளையாட்டு வீரர்களின் திறமைகள் பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றன.



ஈரோடு மாநகர் சம்பத்நகர் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் மாநகர் மாவட்ட கழகத்தின்சார்பாகசெயல்வீரர்செயல்வீராங்கனைஆலோசனைகூட்டம்நடைபெற்றது.இக்கூட்டத்தில்தமிழகவருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் K.A.செங்கோட்டையன், கைத்தறித்துறை அமைச்சர் M.விஜய் பாலாஜி,ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த்மோகன் , மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகம் மற்றும் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்.

# Contractor held after 6yearold drowns in pit in Greater Noida; 2 officials removed

*A 53-year-old contractor, was arrested, while the supervisor and technical supervisor of the Greater Noida Authority were removed from their duties on Sunday in connection with the death of a six-year-old boy who drowned in a 10-feet-deep water-filled pit inside a residential society in Greater Noida's Knowledge Park 2 late Saturday evening. "Contractor Manoj Jain, 53, a resident of Crossings Republik in Ghaziabad, was arrested for negligence on Sunday, and further investigation is underway," said Ravi Shankar Nim, deputy*



*commissioner of police, Greater Noida.Complaint filed against contractor, GNA says*

*The Greater Noida Authority said in a statement that it had also filed a complaint against the contractor at the Knowledge Park police station. "The contractor company has been blacklisted, and water department supervisor Akash Kumar and technical supervisor Jonny Kumar have been removed from their active duties for negligence," the statement read. Also read | Greater Noida man killed by colleague over 'friendship with woman'*

*"The names of the Supervisor and Technical Supervisor have also been prioritised for inclusion in the FIR, and directions for a departmental enquiry have also been initiated by the CEO," it said. The victim, a resident of Kaladham Society in Knowledge Park 2, died after drowning in a 10-feet-deep water-filled pit on Saturday around 7 pm while playing with a friend, police said. The incident took place about 200 to 300 metres away from his house.*

# ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் விசிக மாநில பொருளாளர் எஸ்.எஸ்.பாலாஜி உளுந்தூர்பேட்டை மாநாடு பற்றி ஆலோசனை நடத்தினார்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஆகஸ்ட் 17 அன்று உளுந்தூர்பேட்டையில் நடைபெற உள்ள தமிழ் தேசிய எழுச்சி மாநாடு தொடர்பாக,பெருந்துறை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில பொருளாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ்.பாலாஜி, ஆலோசனை மேற்கொண்டார். நிகழ்வின் போது மாநாட்டிற்கு அழைத்து வரப்படும் உறுப்பினர்கள், வாகனங்களின் எண்ணிக்கை, சுவரொட்டி மற்றும் சுவர் விளம்பரப் பணிகள், கட்சி நிதி வழக்கம் குறித்து தொகுதிக்குட்பட்ட அனைத்து நிர்வாகிகளிடமும் அவர் விரிவாகக் கேட்டறிந்தார். இக்கூட்டத்தில் திருப்பூர் மண்டல செயலாளர் பெ.ச.சிறுத்தை வள்ளுவன், மண்டல துணைச் செயலாளர்கள் திருமா குணவளவன், இரா. அம்பேத்கர், மற்றும் பெருந்துறை சட்டமன்ற தொகுதி மாவட்ட துணை செயலாளர்கள் அண்ணாமலை, கிருஷ்ணமூர்த்தி, ஜெயக்குமார், கவிதா, ஜெனிபர் ரோஸ்லின் மேரி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் அமுதா கிருஷ்ணமூர்த்தி, ராஜேஷ்குமார், இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் மணிகண்டன், மகளிர் விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் சுபாஷினி, இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாவட்ட அமைப்பாளர் நந்தினி, பெருந்துறை மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ்வீரன், பெருந்துறை வடக்கு ஒன்றிய செயலாளர் குமார், சென்னிமலை ஒன்றிய செயலாளர்கள் நவீன்குமார், ஜெபராஜ், பெருந்துறை நகர செயலாளர் மு.முருகசாமி, சென்னிமலை நகர செயலாளர் விஜயா, பெருந்துறை கருமாண்டிசெல்லிபாளையம் பேரூர் செயலாளர் லதாமணி, காஞ்சிக்கோவில் பேரூர் செயலாளர் க.கந்தசாமி, கிழக்கு பெருந்துறை ஒன்றிய பொருளாளர் ஜீவா, பெருந்துறை ஒன்றிய துணை செயலாளர் சௌந்தர், பெருந்துறை ஒன்றிய பொருளாளர் தனலட்சுமி, கிறிஸ்துவ சமூக நீதி பேரவை ஒன்றியசெயலாளர்தீமோத்தேயு, பெத்தாம்பாளையம் பேரூர் செயலாளர் தாமோதரன், காஞ்சிக்கோயில்பேரூர் செயலாளர் சேகர் துரைசாமி, பெருந்துறை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் அபிராமி ஸ்ரீநிதி, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட செயலாளர் பரமேஸ்வரன், காஞ்சிக்கோயில் பேரூர் செய்தி தொடர்பாளர் செண்பகம், விவசாய பாதுகாப்பு இயக்க மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர், தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் கௌதம், பெருந்துறை பேரூர் துணை செயலாளர் ரவிச்சந்திரன், பெருண்டிசெல்லிபாளையம்நகர துணை செயலாளர் சுமதி, இளஞ்சிறுத்தை எழுச்சி ஒன்றிய செயலாளர் ஸ்ரீநாத், மகளிர் விடுதலை இயக்க ஒன்றிய செயலாளர் லதா, கருமாண்டிசெல்லிபாளையம் பேரூர் துணை செயலாளர் பிரபாகரன், காஞ்சிக்கோயில் பேரூர் துணைசெயலாளர்சின்னுச்சாமி, கருமாண்டிசெல்லிபாளையம் பெருந்துறை ஒன்றிய பொருளாளர் மகேந்திரன், மகளிர் மாவட்ட பொருளாளர் அம்சா, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மேற்கு ஒன்றிய செயலாளர் அட்சயா, பெருந்துறை மேற்கு ஒன்றிய துணை செயலாளர் ராஜா, இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை ஒன்றிய செயலாளர் சங்கீதா மற்றும் கிறிஸ்துவ சமூக நீதி பேரவை மாவட்ட அமைப்பாளர் நாச்சிமுத்து கொமரன் உள்ளிட்ட பல நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்.

# மாங்குப்பத்தில் சிலம்ப பட்டையத் தேர்வு; சி.எம்.டிராபிக்கு 4 மாணவர்கள் தேர்வு

இராணிப்பேட்டை மாவட்டம், மாங்குப்பம் கிராமத்தில் உள்ள அரசினர் நடுநிலைப்பள்ளியில், இந்திய சிலம்ப கோர்வை மற்றும் கலை சார்பில், மகாகுரு தற்காப்புக் கலை நிபுணர் திரு. பெ. முனுசாமி அவர்களின் ஏற்பாட்டில், சிலம்ப பட்டையத் தேர்வு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்குமாஸ்டர் ஆதவன் தலைமை தாங்கினார்.இதில் மாங்குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் தேவி பூபாலன், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊர் நாட்டாண்மையாளர்கள், பொதுமக்கள் மற்றும் பலர் கலந்துகொண்டுநிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக இந்திய சிலம்ப கோர்வை (Silambam Korvai India) அமைப்பின் தலைவர், இந்தியாவைச் சேர்ந்தமாஸ்டர்சி.செல்வம் (3rd Dan Black Belt) கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டையத் தேர்வை நடத்தி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய ஊராட்சி மன்றத் தலைவர் தேவி பூபாலன், கவுன்சிலர் ராஜ்குமார் சிலம்பம் பயிலும் மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக உறுதியளித்தார். தொடர்ந்து பேசிய மாஸ்டர் சி. செல்வம், மாணவர்கள் தொடர்ந்து பயிற்சியை அதிகரித்து, தங்களது திறமையை மேம்படுத்தி மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று அடுத்தடுத்த நிலைகளுக்கு முன்னேற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த பட்டையத் தேர்வில் சிறப்பாக செயல்பட்ட எஸ். வர்ஷிதா (S. Varshitha), எஸ். பவதாரணி (S. Bhavadharani), ஏ. பூஜிதா (A. Poojitha), எஸ். குருவேல் (S. Guruvel) ஆகியோர் சி.எம். டிராபி (C.M. Trophy) போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டனர். நிகழ்ச்சியில் தேர்வான மாணவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டதுடன், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிலம்பக் கலையை ஊக்குவித்தனர்.

## ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின்

# ஈரோடு மாவட்ட தமிழக அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கு பாராட்டு விழா

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் ஈரோடு மாவட்டதமிழகஅமைச்சர்கள் மற்றும்சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கு பாராட்டு விழா (26.07.2026 )நேற்று கூட்டமைப்பின் தலைவர் V.K.ராஜமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. ஃபாட்டியா பொதுச்செயலாளர் P.ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார். ஈரோடு மாவட்ட அக்ரோ இன்புட் டிரேடர்ஸ் அசோசியேஷன் தலைவர் M.தங்கமுத்து மற்றும் ஈரோடு மில் க்ளாத் மெர்ச்சண்ட் அசோசியேஷன் தலைவர் V. கோபாலன் முன்னிலை வகித்தனர். K.A.செங்கோட்டையன், தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்K.A.செங்கோட்டையன்,தமிழக கைத்தறி, ஜவுளி மற்றும் கதர் துறை அமைச்சர் M.விஜய்பாலாஜி,ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் K.K. ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் Er.D.சண்முகன் , பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் V.P.தமிழ்ச்செல்வி



ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களுக்கு FATIA சார்பாக பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கி சங்க உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்கள் சிறப்புரை ஆற்றினர். இந்த பாராட்டு விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக FATIA பொருளாளர் R.முருகானந்தம் நன்றியுரை ஆற்றினார் . இந்த நிகழ்வில் பல்வேறு கோரிக்கைகளை மனுவாக அமைச்சர்களிடம் வழங்கப்பட்டன. 2026-ல் பெருவாரியான வாக்குவித்தியாசத்தில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள தமிழக முதல்வர் C.ஜோசப் விஜய் கடந்த இரு மாதங்களில் இந்தியாவே திரும்பிப் பார்க்கும்அளவிற்குதமிழகத்தில் பல மாற்றங்களை கொண்டு வந்ததற்கு FATIA சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். ஈரோடு மாவட்ட அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களான தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் K.A.செங்கோட்டையன், தமிழக கைத்தறி, ஜவுளி கதர் துறை அமைச்சர் M.விஜய்பாலாஜி,, ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்,K.K.ஆனந்த் மோகன்,மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்Er.D.சண்முகன், பவானிசாகர் சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் V.P.தமிழ்ச்செல்வி தமிழ்நாடு முதல்வருடன் இணைந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதற்கு FATIA சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு வரும் காலத்திலும் மென்மேலும் இதேபோல சிறப்பாக செயல்பட வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.